# காலச்சுவடு பதிப்பகம்

669, கே.பி. சாலை
நாகர்கோவில் 629001
தொலைபேசி: 91–4652–278525
மின்னஞ்சல்: nagercoil@kalachuvadu.com
'Like' us on
facebook.com/Kalachuvadu Publications

- 40வது சென்னைப் புத்தகக் கண்காட்சி 2017
- 06.1.2017 முதல் 19.1.2017 வரை
- செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி, (பச்சையப்பன் கல்லூரி எதிரில்), சென்னை 600 030.

## சென்னைப் புத்தகக் கண்காட்சியில் சிறப்புத் திட்டங்கள்

### பஷீர் படைப்புகள்

**'காதல் கடிதம்'** (நாவல்), **'பஷீர் நாவல்கள்'** (ஏழு நாவல்கள் அடங்கிய தொகுப்பு), **'அனல் ஹக்'** (சிறுகதைகள்), **'உலகப் புகழ்பெற்ற மூக்கு'** (சிறுகதைகள்), **'உண்மையும் பொய்யும்'** (கேள்வி–பதில்)

ஐந்து தொகுப்புகள் அடங்கிய **ரூ. 1275**க்கான நூல்கட்டு **ரூ.795** மட்டுமே.

### பாரதியியல் நூல்கள்

**'பாரதியார் கவிநயம்'** (தொ–ர்: ரா.அ. பத்மநாபன்), **'பாரதியைப் பற்றி நண்பர்கள்'** (தொ–ர்: ரா.அ. பத்மநாபன்), **'பாரதி: கவிஞனும் காப்புரிமையும்'** (ஆ.இரா. வேங்கடாசலபதி), **'பாரதியின் இறுதிக்காலம்'** (ஆய்வும் பதிப்பும்: ய. மணிகண்டன்), **'சித்திர பாரதி'** (ரா.அ. பத்மநாபன்) **'எழுக, நீ புலவன்!'** (ஆ.இரா. வேங்கடாசலபதி)

ஆறு நூல்கள் அடங்கிய **ரூ. 1450**க்கான நூல்கட்டு **ரூ.925** மட்டுமே.

### ஓரான் பாமுக் படைப்புகள்

**'வெண்ணிறக் கோட்டை'**, **'இஸ்தான்புல்'**, **'பனி'**, **'என் பெயர் சிவப்பு'**

நான்கு நாவல்கள் அடங்கிய **ரூ. 1660**க்கான நூல்கட்டு **ரூ.990** மட்டுமே.

### நீதிக்கட்சி நூற்றாண்டுத் திட்டம்

**'பெரியாரின் நண்பர்'** (பழ. அதியமான்), **'சேரன்மாதேவி: குருகுலப் போராட்டமும் திராவிட இயக்கத்தின் எழுச்சியும்'** (பழ. அதியமான்), **'ஒரு சூத்திரனின் கதை'** (ஏ.என். சட்டநாதன் தமிழில்: கே. முரளிதரன், ஆ. திருநீலகண்டன்), **'ஆனந்தம் பண்டிதர்'** (ப–ர்: கோ. ரகுபதி), **'எம்.எஸ்.எஸ். பாண்டியன்'** (காலச்சுவடு கட்டுரைகள்)

ஐந்து தொகுப்புகள் அடங்கிய **ரூ. 1250**க்கான நூல்கட்டு **ரூ.795** மட்டுமே.

## காலச்சுவடு அரங்கில் எழுத்தாளர்கள்







சென்னைப் புத்தகக் கண்காட்சியில் கீழ்க்காணும் தேதிகளில் எழுத்தாளர்களிடம் நூல்களில் கையெழுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 8–01–2017 | ஞாயிறு | மாலை 6:00 | **பெருமாள்முருகன்** |
| ஜனவரி 9–01–2017 | திங்கள் | மாலை 6:00 | **சீனிவாசன் நடராஜன்** |
| ஜனவரி 13–01–2017 | வெள்ளி | மாலை 6:00 | **தேவேந்திர பூபதி** |
| ஜனவரி 14–01–2017 | சனி | மாலை 6:00 | **மு. சுயம்புலிங்கம்** |
| ஜனவரி 15–01–2017 | ஞாயிறு | மாலை 6:00 | **கலாப்ரியா** |

# காலச்சுவடு பதிப்பகம் | 2016 வெளியீடுகள் | பட்டியல்

**கி | ளா | சி | க் | நா | வ | ல்**




## மெல்லக் கனவாய் பழங்கதையாய்

**பா. விசாலம்,** ரூ. 425

இந்த நாவல் அனுபவங்களின் அப்பட்டமான உணர்வுகளின் ஆதாரத்தில் எழுதப்பட்டது. ஆனால் கற்பனைதான் என்கிறார் பா. விசாலம் தன் முன்னுரையில். குழந்தைப் பருவத்திலிருந்து, இயக்கத் தோழரையே மணப்பதுவரை போகும் கதையைப் படிக்கும்போது அதிலுள்ள விசாலத்தின் ஆழமான உணர்வுகள் மற்றும் சொந்த அனுபவங்களின் கனத்தை அறிந்துகொள்ள முடிகிறது. பெயரில்லா இந்தக் கதையின் நாயகியை நான் விசாலம் என்றே படித்தேன். அந்த அன்னம் வானில் பறப்பதையும் அது தாமரைக்குளத்தில் இறங்குவதையும் உணர முடிகிறது. அத்துடன் அதன் சோர்வையும் தனிமையையும்கூட.

(முன்னுரையில் அம்பை)

**நா | வ | ல்**




## பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை

**பெருமாள்முருகன்,** ரூ. 175

மனிதர்களைப் பற்றி எழுத அச்சம். தெய்வங்களைப் பற்றி எழுதவோ பேரச்சம். அசுரர்களைப் பற்றி எழுதலாம். அசுர வாழ்க்கையும் கொஞ்சம் பழக்கம்தான். இப்போதைக்குத் தொட்டுக்கொள்ளலாம். சரி, விலங்குகளைப் பற்றி எழுதுவோம். பிரச்சினை தராத அப்பிராணி ஆடு. ஆட்டில் இரண்டு வகை. வெள்ளாடு, செம்மறி. சுறுசுறுப்பானது வெள்ளாடு. கதையில் ஓட்டம் இருக்க வேண்டும். அதற்கு லாயக்கு வெள்ளாடுதான். இரண்டாண்டுகளுக்குப் பின் இவ்விதமான உருவான எனது பத்தாவது நாவல் 'பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை.'




## நளபாகம்

**தி. ஜானகிராமன்,** ரூ. 350

தி. ஜானகிராமன் கணையாழி இதழில் தொடராக எழுதி, அவரது மறைவுக்குப் பின்னர் நூல் வடிவம் பெற்ற நாவல் 'நளபாகம்.' அவரது நாவல்களில் மையப் பொருளை அவ்வளவு வெளிப்படையாக உணர்த்தாத நாவலும் இதுவே. இந்தப் பூடகமே நாவலை இன்றும் சுவாரசியமான வாசிப்புக்கு உரியதாக நிலைநிறுத்துகிறது. சுவீகாரப் பிள்ளைகள் வாயிலாகவே தொடரும் தனது குடும்ப பாரம்பரியத்தை ரத்த உறவு மூலம் வலுப்படுத்த ரங்கமணி மேற்கொள்ளும் அபாயகரமான செயலே நாவலின் மையம். பச்சாத்தாபம், காமம், ஆன்மீகம் ஆகிய மூன்றின் கலவையான வண்ணத்தில் மிளிர்கிறது இந்தப் படைப்பு.

## மாதொருபாகன், அர்த்தநாரி, ஆலவாயன்

(மூன்று நூல்கள் அடங்கிய தொகுதி)

**பெருமாள்முருகன்**

விலையடக்கப்பதிப்பு ரூ. 260



இந்த மூன்று நாவல்களையும் மிகுந்த ஆசையோடு எழுதினேன். எழுதிய காலத்து இன்பநிலை முடிந்து இவற்றால் பெருந்துயர் பீடித்தபோது இவற்றை இனிமேல் தனித்தனியாகக்கூட வெளியிடக்கூடாது என்றுதான் முடிவெடுத்திருந்தேன். இப்போதோ மூன்றையும் ஒரே நூலாக வெளியிடும் நிலை. எண்ணங்களைத் தீர்மானிப்பதில் அகநிலை மட்டுமல்ல, புறநிலைக்கும் பெரும் பங்கிருக்கிறது என்பதுதான் என் நம்பிக்கை. அதை இன்று நிதர்சனமாக உணர்கிறேன்.

பெருமாள்முருகன்

**கு | று | நா | வ | ல்**



## அசோகமித்திரன் குறுநாவல்கள்

**(முழுத் தொகுப்பு)** ரூ. 590

எளிய மனிதர்களின் வாழ்க்கையையே சாரமாக எடுத்திருக்கிறார் அசோகமித்திரன். அவரது கதை மாந்தர்களைப் போல் அவரது மொழியும் அலங்காரமற்றது; ஆனால் பிரகாசமும் நுட்பமும் கொண்டது. ஒரு கதையை, அரசியலை, வாழ்க்கையைச் சொல்லும்போது சமானியனின் குரலையே விவரிப்பு மொழியாகத் தேர்ந்தெடுக்கிறார். அசோகமித்திரனுக்குத் தீர்க்கமான அரசியல் பிடிபாடுகள் உண்டு; அவரது கதை மாந்தர்களும் அதைப் பேசுகிறார்கள். ஆனால் நடுத்தர வர்க்கத்தினரின் அன்றாடத்தில் அரசியல் நிகழ்த்தக்கூடிய பாதிப்பாகவே கதை மாந்தர்களுக்கு இடையில் அது பகிரப்படுகிறது.

மண்குதிரை

**கி | ளா | சி | க் சி | று | க | தை | க | ள்**




## அம்மா ஒரு கொலை செய்தாள்

**அம்பை,** தொ-ர்: **அனார்,** ரூ. 325

அம்பை, பரந்த நோக்கமும் கூர்மையான வெளிப்பாடும் வலுவான தீர்மானங்களும் கொண்டவர். பெருமிதம் கொள்ளத்தக்க தனித்துவமானவர். நிராகரிக்க முடியாதபடி தன்னைப் பரிபூரணமாக அர்ப்பணித்தவர். வாசிப்பவரை ஆழநேசித்து வலுப்படுத்தும் சக்தியைக் கொண்டிருக்கும் அம்பையின் கதைகள் பெண்ணானவள் கொல்லப்படுகிற ரணங்களிலிருந்து மீண்டெழுந்து சொல்லப்பட்டவை.

அனார்

**சி | று | க | தை | க | ள்**




## நீர்மாலை

**மு. சுயம்புலிங்கம்,** ரூ. 125

ஒரு ஐம்பது சொற்கூட்டங்கள் சேர்ந்து உண்டாக்கக்கூடிய உணர்ச்சியை, சுயம்புலிங்கத்தின் ஒரு சொல் உருவாக்கி விடுகிறது. தவலைப் பானையின் குடிநீரைப் போல அந்தக் கதையின் ஒரு சொல்கூடத் தழும்பிச் சிதறுவதில்லை. வர்க்கப் பாகுபாட்டில் கீழ்நிலையிலுள்ள அவர்களின் அன்றாடத்திலிருந்து ஒரேயொரு சம்பவத்தை அதன் நெஞ்சுத் துடிப்புடன் எடுத்துக் கதையாக நம்முன் வைக்கிறார். அந்தச் சிறு சம்பவம் அந்த மனுஷர்களின் ஒரு ஜன்ம வாழ்க்கையைச் சொல்லிவிடுகிறது.

மண்குதிரை

## பெருமாள்முருகன் சிறுகதைகள் [1988 – 2015]

ரூ. 690




1988, ஆகஸ்ட் மாதக் கணையாழியில் வெளியான ‘நிகழ்வு’ என்னும் மிகச்சிறு சிறுகதையே ஓர் இதழில் வெளியான எனது முதல் சிறுகதை. 2015 ஜனவரியில் காலச்சுவடு இதழில் வெளியான ‘மாலை நேரத் தேநீர்’ கடைசிக் கதை. அதற்குப் பின் இந்த இரண்டாண்டுகளில் ஒரு கதைகூட எழுதவில்லை. ஏற்கெனவே நான்கு தொகுப்புகளாக வெளியானவை, நூல்களில் இடம்பெறாதவை அனைத்தும் சேர்ந்த ஒட்டுமொத்தத் தொகுப்பு இது. மேலும் இக்கதைகள் என் இலக்கிய ஆற்றலின் போக்கை உணர்த்தும் பெருஞ்சான்றாக விளங்கி வாசிப்போரின் அனுபவ வெளியை விரிவாக்கும் எனவும் நம்புகிறேன்.

பெருமாள்முருகன்

## அம்பை கதைகள் [1972 – 2014]

(42 ஆண்டுக் கதைகள்), ரூ. 990



அம்பை
42 ஆண்டுக்கதைகள்

நவீன தமிழ் இலக்கியத்தின் – முன்னோடிகளுள் ஒருவரான அம்பை கடந்த அரைநூற்றாண்டு காலம் எழுதிய கதைகளின் தொகுப்பு இந்நூல். அதுகாறும் மறுக்கப்பட்ட உலகின் புதிய குரல் அம்பை யினுடையது. இந்தக் கதைகள் உறவுகளால், போராட்டங்களால், கசப்புகளால், தனிமைகளால், அபூர்வமான பரவசங்களால், விம்மல்களால், கண்முன் தன் நிறங்களை இழந்து வெளிரும் சமூகத்தவர்களால், இடர்களை நேர்நின்று எதிர்கொள்ளத் துணிந்தவர்களால், இன்ன பிறவற்றால் ஆனது.

## கவர்னர் பெத்தா

**மீரான் மைதீன்,** ரூ. 100




ஒரு கனாபோல் நம்மைக் கடந்தோடும் காலத்தைக் கையில் பிடித்து வைத்துக்கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு விநாடியும் காலத்தின் கரைதல் மட்டுமல்ல; அவை நம் மனத்தின் ஈரத்தையும் துடைத்துச் செல்கின்றன. வெறுமையாக நம்மைச் சூழப்போகும் தருணங்களை உடைத்தெறிந்து மீண்டும் நமக்குள் பசும்புல்போல் தழைக்க வைப்பதே மீரான் மைதீனின் கதைகள்!

களந்தை பீர்முகம்மது

### மு | த | ல் | க | வி | நூ | ல் | வ | ரி | சை

## மற்றாங்கே

**கலாப்ரியா,** ரூ. 195




கலாப்ரியாவின் வாழ்க்கைப் பார்வை நிகழ்கால எதார்த்தம் சார்ந்தது. ‘இன்னும் கேள்விகள் சொல்லித் தந்து நகரும்’வாழ்வு, அக உலகில் தோற்றுவிக்கும் சிக்கல்களையும் புற உலகில் ஏற்படுத்தும் நிம்மதியின்மையையும் எதிர்கொள்வதாகவே அவர் கவிதை இயங்குகிறது. எதார்த்த தளத்திலும் நிகழ்கால நீட்சியிலும் அவரது கவிதைகள் அமைவதால் தீவிரம் கூடியவையாகின்றன. எதார்த்தமானவை என்பதாலேயே தீவிரமானவையாகவும் தீவிரமானதாலேயே எதார்த்தமானவையாகவும் உள்ளன.

சுகுமாரன் (கலாப்ரியாவின் ‘வனம் புகுதல்’ நூல் முன்னுரையில்)

### க | வி | தை | க | ள்

## மூக்குத்தி அணிந்த பெண் நடத்துனர்

**குணா கந்தசாமி,** ரூ. 145




குணாவின் இந்தக் கவிதைகளினூடாக நீங்கள் ஒருவித உருவ ஒழுங்கையும், ஓசையமைதியையும் உணரமுடியும். முதிர்ச்சியும் பக்குவமும் கொண்ட உலகியல் நோக்கும், அது கூட்டியிருக்கும் மென்மையானதொரு அங்கதமும், சுழித்தெழும் உணர்ச்சிகளை கையாளும்போதுகூட பேணுகிற சமநிலையும், வெகு நுட்பமான தருணங்களையும், சலனங்களையும், அதன் சாயைகளுடன் ஒற்றி எடுத்துவிடக்கூடிய நேர்த்தியான மொழியும், இந்த கவிதை களுக்கு ஆர்ப்பாட்டம் எதுவுமில்லாத, அசலானதொரு ஆழத்தை வழங்குகிறது.

க. மோகனரங்கன்

## வாரணாசி

**தேவேந்திர பூபதி,** ரூ. 100




அகவெளியில் நீந்திப் போகும் பிம்பங்களைப் பற்றிப் பிடித்துக் கோத்துப் பின்னும் லாவகம் பூபதிக்குக் கைவந்ததுதான். இந்தத் தொகுதியில் நேர்ந்திருக்கும் புதிய விஷயம், கவிதையின் உள்ளொழுங்கைக் கலைத்துக் கலைத்துப் போட்டுப் புதிய ஒழுங்கை உருவமைக்கும் பெரும் விளையாட்டை விளையாடியிருக்கிறார் பூபதி. கவிதையின் உள்வெளியில் பிம்பங்கள் தொடர்ந்து புதிய ஒழுங்குக் கோலங்களைப் பின்னிக்கொண்டே இருக்கும் ஜாலம் கவிதைகளில் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது.

ஆனந்த்

## தீராப் பகல் [முழுத் தொகுப்பு]

**எம். யுவன்**




எம். யுவனின் கவிதைகள் தனித்துவமானவை. அனுபவத்தைப் பதிவு செய்வதோ, அனுபவத்தை உருவாக்குவதோ அல்ல கவிதை. ஓர் அனுபவத்தின் சாயையிலிருந்து முற்றிலும் வேறான ஒன்றைக் கண்டடைவதே அவர் கவிதைகளின் தனித்துவம். அந்த வேறு ஒரு உலகை, வேறு ஒரு மொழியை வாசகர் இனங்காணச் செய்வதே அவரது கவிதைச் செயல்பாடு.

### உ | ல | க | கி | ளா | சி | க் | க | ட் | டு | ரை | க | ள்

## புரட்சியாளன்

**அல்பெர் கமுய்,** தமிழில்:

நாகரத்தினம் கிருஷ்ணா, ரூ. 475




நேற்றுவரை தண்டனைக்கு ஆளான குற்றம், இன்றைக்குத் தண்டனைக்குரிய சட்டத்தை வகுக்கிறது. “திரும்பும் திசைதோறும் கொலைச்செயல் மட்டுமே நீக்கமற நிறைந்திருக்கிறது” என்று நாசுக்காகப் புலம்பிக்கொண்டே பிறர் செய்யும் கொலைக்கு உடன்படும் நிலைக்கு அனைவரும் தள்ளப்பட்டுள்ளோம். இப்படியானதொரு கொடூரமான சூழலில், இந்நூல் நேரடியாகப் பிரஞ்சுமொழி யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(முன்னுரையில் க. பஞ்சாங்கம்)

## கட்டுரைகள்

### பாதுகாக்கப்பட்ட துயரம்



**களந்தை பீர்முகம்மது,** ரூ. 190

இந்தியாவில் கடந்த 25 ஆண்டுகளாக இஸ்லாம் சந்திக்கும் நெருக்கடிகள் குறித்த பண்பாட்டு அரசியல் பார்வைகளான கட்டுரைகளைக் கொண்டது 'பாதுகாக்கப்பட்ட துயரம்.' சுயானுபவம் மிளிரும் திறந்த மொழியில் உயிர் உணர்ச்சி கலந்த நடையில் அமைந்த மதம் சார்ந்த, ஆனால் மதச்சார்பற்ற கட்டுரைகள் அடங்கியது இந்நூல். மைய நீரோட்டத்தில் பொதுப்புத்தி சாராத இஸ்லாம் பற்றிய கட்டுரைகள் தமிழ்ச் சூழலில் அபூர்வமானவை. அவ்வகையில் 'பாதுகாக்கப்பட்ட துயரம்' அபூர்வம்.

பழ. அதியமான்

### விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் தனித்துவமான போராட்டங்கள்

**ரணஜீத் குஹா, சுசிதாரு, தேஜஸ்வினி நிரஞ்சனா**

தமிழில்: **ராஜ்கௌதமன்,** ரூ. 100



சோசலிசம், பொதுவுடைமை, மலையினமக்கள் இயக்கம், தலித்தியம், பெண்ணியம் ஆகிய இடதுசாரி இயக்கங்கள் தங்கள் போராட்ட வழிமுறைகளை இந்தியச் சூழலுக்கு ஏற்றவிதமாகவும், அதேவேளையில் உலகளாவிய நிலையில் இவைபற்றிப் பேசப்படுகிற சரியான வரைவிலக்கணங்களுக்கு ஏற்றவிதமாகவும் தகவமைத்திட இக்கட்டுரைகள் கருத்துக்களை வழங்கக்கூடும்.

### எழுக, நீ புலவன்!

பாரதி பற்றிய கட்டுரைகள்



**ஆ.இரா. வேங்கடாசலபதி,** ரூ. 225

உள்ளூர் ஜமீன்தார் முதல் உலகப் போர்வரை பாரதியைச் சுற்றிச் சுழன்ற உலகத்தைக் காட்டும் கண்ணாடி இந்நூல். முக்கால் நூற்றாண்டு பாரதி ஆய்வுக்குப் பிறகும் இன்னும் வெளிச்சம் பெறாத செய்திகளைப் புதிய விவரிப்புகளுடன் முன்வைக்கின்றன பாரதி ஆய்வுக்கு முக்கியப் பங்காற்றியுள்ள ஆ.இரா. வேங்கடாசலபதியின் விறுவிறுப்பான நடையில் அமைந்த சுவையான கட்டுரைகள்.

### நிலாந்தன் கட்டுரைகள்




ரூ. 325

இலங்கை அரசின் யுத்த வெற்றிக்குப் பின்பான தமிழர்களின் நிலை, வெற்றிவாதத்தின் எதேச்சாதிகாரம், தமிழ்ச் சிந்தனைப் பரப்பில் நிலவும் போதாமைகள், விமர்சனங்கள், தமிழ் சிவில் சமூகத்தின் ஜனநாயக வெளி, இந்திய வெளியுறவுக் கொள்கைகள், தமிழ் டயஸ்பொறாவின் ஈழத் தமிழ் அரசியல், பதின்மூன்றாவது திருத்தப் பின்னணியின் போதாமை, சர்வதேசப் பொறிமுறைக்குள் சிக்கிய தமிழர்கள் போன்ற விடயங்கள் என ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## உலக கிளாசிக் வரலாறு

### முஹம்மத் நபி (ஸல்)



**முஹம்மத் ஹுஸைன் ஹைகல்**

தமிழில்: **குளச்சல் யூசுஃப்,** ரூ.595

முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப்பற்றி எழுதப்பட்ட வாழ்க்கை வரலாற்று நூல்களில், உலக அளவில் அதிகக் கவனித்துக்குரியதும் விற்பனையாவதும் ஹுஸைன் ஹைகல் எழுதிய இந்த 'ஹயாத் முஹம்மத்' நூல்தான். ஆங்கிலம், பிரெஞ்ச் உள்ளிட்ட உலகின் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட இந்நூல், 'காலச்சுவடு' வெளியீடாகத் தமிழில் தற்போது வெளியாகிறது.

## வாழ்க்கை வரலாறு

### நான் தைலாம்பாள்




**கமலா ராமசாமி,** ரூ. 95

சுந்தர ராமசாமி பற்றிய நினைவுகளின் திரட்டான 'நெஞ்சில் ஒளிரும் சுடர்' நூலுக்குப் பிறகு கமலா ராமசாமி எழுதி வெளிவரும் நூல் 'நான் தைலாம்பாள்'. தனது தாயின் வாழ்க்கை குறித்து கமலா ராமசாமி எழுதியுள்ள நூல் ஒருவகையில் புதுமையானது. அம்மா தைலாம்பாளின் கதையை மகள் கமலா விரித்துரைக்கிறாள். அதுவும் அம்மாவின் குரலில். அம்மாவின் பார்வையில். அம்மாவின் விருப்பு வெறுப்புகளினூடே.

## ஆய்வுநூல்

### தொல்தமிழர் திருமணமுறைகள்




சமூக மானுடவியல் ஆய்வு

**சிலம்பு நா. செல்வராசு,** ரூ. 450

இந்த நூல் சமூக அறிவியலின் பயனாய் விளைந்துள்ளது. சங்ககாலத் திருமணமுறைகள் அனைத்தும் நிறுவனத்தன்மை பெற்றவை. இலக்கியத்தின் பாடுபொருளாக அமைந்த இக்கூறுகளைச் சமூக மானிடவியலாக இந்நூலாசிரியர் ஆராய்கிறார். வீரயுகப் பாடல்களைக் க. கைலாசபதியும், தமிழ் நாடகங்களைக் கா. சிவத்தம்பியும் ஆராய்ந்த பிறகுதான் அப்பொருளின் வீச்சு உயர்ந்தது. தமிழர் திருமணமுறைகள் பற்றிப் பல ஆய்வுகள் வந்திருப்பினும் அவையனைத்தையும் விஞ்சி நிற்கின்ற ஓர் ஆய்வாக இந்நூல் அமைகிறது.

(முன்னுரையில் பக்தவத்சல பாரதி)

## பனைமரமே! பனைமரமே!




பனையும் தமிழ்ச் சமூகமும்

**ஆ. சிவசுப்பிரமணியன்,** ரூ. 425

தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் மரம் பனை. இம்மரத்தை மையமாகக் கொண்டு உருவான வாய்மொழி வழக்காறுகளையும் எழுத்துப்பதிவுகளையும் இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. கிறித்துவிற்கு முந்தைய காலத்திய தமிழ் பிராமிக் கல்வெட்டுகளில் தொடங்கி இடைக்காலக் கல்வெட்டுகள்வரை, தொல்காப்பியம் சங்க இலக்கியம் தொடங்கி– வாய்மொழி இலக்கியம் – நவீன இலக்கியம்வரை எனப் பல அரியதரவுகளின் துணையுடன் இந்நூல் உருவாகியுள்ளது.

**ஆ | வ | ண | ப் | ப | தி | வு**

## முதலியார் ஓலைகள்




**அ.கா. பெருமாள்,** ரூ. 195

அச்சில் வராத ஆவணங்களைப் பதிவுசெய்வது என்னும் செயல்பாடு தமிழில் அருகிவிட்டது. வரலாற்றுச் செல்வங்களாகக் கருதத்தகும் இந்த ஆவணங்கள் யாவும் முறையாகத் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டியவை. அ.கா. பெருமாள் அவர்கள் மிக ஆர்வத்துடனும் முயற்சியுடனும் தொகுத்துப் பதிப்பித்துள்ள இந்த ஆவணத் தொகுதி தமிழ்நாட்டில் பரவலாக உள்ள பிற ஓலை ஆவணங்களைத் திரட்டவும் பயன்படுத்தவும் தூண்டுகோலாக அமையும் என்று கருதுகிறேன். அவருக்குத் தமிழ்நாடு மற்றும் கேரள வரலாற்றார்வலர் அனைவரும் மிகவும் கடமைப்பட்டவர்கள்.

(அறிமுகத்தில் Y. சுப்பராயலு)

வல்லமை
உயர்தல், மலர்தல், விரிதல்
வல்லமை: இது ஒரு காலச்சுவடு இம்பிரின்ட்
669, கே.பி. சாலை, நாகர்கோவில் 629001
91–4652–278525 vallamaibooks@gmail.com
'Like' us on
facebook.com/Vallamai Books

## சானியா மிர்ஸா கை வந்த கலை




**சானியா மிர்ஸா, இம்ரான் மிர்ஸா, ஷிவானி குப்தா**

தமிழில்: ராஜலக்ஷ்மி சிவலிங்கம் ரூ. 195

தற்போது பெண்கள் இரட்டையர் பிரிவில் உலகத் தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் சானியா மிர்ஸா, தனது 16வது வயதில் பெண்கள் இரட்டையர் விம்பிள்டன் போட்டிகளில் வென்று உலகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்படும் ஆட்டக்காரரானார். ஆறு முறை கிரான்ட்ஸ்லாம் சாம்பியனான இவர், ஆகஸ்ட் 2015 முதல் 2016 பிப்ரவரிவரை நம்பவே முடியாதவகையில் தொடர்ச்சியாக 41 முறை தனது இரட்டையர் போட்டி ஜோடியான மார்டினா ஹிங்கின்சுடன் இணைந்து பிரமிப்பூட்டும் வெற்றிகளை ஈட்டியுள்ளார்.

டென்னிஸ் ஆட்டத்தில் தலைசிறந்தவராகப் பரிணமிப்பதற்கு இவர் கடந்த தடைகள் ஏராளம். இந்த அற்புதமான இந்திய வீராங்கனையின் சாதனைக் கதையைப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்நூல். தன் வாழ்க்கைப் பாதையில் சந்தித்த கஷ்டங்கள், காயங்களுக்காகப் பெற்ற சிகிச்சை, அதனால் ஏற்பட்ட உளவியல் ரீதியிலான அதிர்ச்சிகள், எப்போதும் பொதுமக்கள் பார்வையிலேயே இருக்கும் நிலை குறித்த மன அழுத்தம், வெற்றியுடன் சேர்ந்தே வரும் தவிர்க்க முடியாத அரசியல், மனவேதனைகள் ஆகியவற்றை மிக வெளிப்படையாக இந்நூலில் எழுதியுள்ளார் சானியா மிர்ஸா.

## சூப்பர் 30




**ஆனந்தகுமார்**

தமிழில்: ரவீந்திரன் ரூ. 100

ஆனந்த்குமார், பீகார் மாநிலத்தின் 'கணிதத்திற்கான ராமானுஜன் பள்ளி'யை நடத்திவருகிறார். இவர் நடத்தி வரும் 'சூப்பர் 30' மூலம் பீகாரைச் சேர்ந்த மிக ஏழ்மையான, திறமையுள்ள 30 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை இந்தியத் தொழில்நுட்ப நிலைய நுழைவுத்தேர்வுக்குத் தயார்ப்படுத்தி, ஒரு வருடத்துக்கான முழுச்செலவையும் ஏற்று, அந்த மாணவர்களை வெற்றிபெறச் செய்துவருகிறார்.

*"ஆனந்த் ஐயாவை எனது வழிகாட்டியாகப் பெற்றது பெரும் அதிருஷ்டம் என்றே நம்புகிறேன். அவர் மிகச் சிறந்த நண்பராக, பாதுகாவலராக, வழிகாட்டியாக விளங்குகிறார்"* – அனுப்ராஜ் (சூப்பர் 30 குழு 2010ஆம் ஆண்டு), பி.எஸ். டேக்கோர் நிறுவனத்தின் இணை ஸ்பதாபகர், சிடிஓ.

*"அங்கே படித்ததால்தான் என்னால் ஐஐடி ஜேஇஇ நுழைவுத்தேர்வு எழுதித் தேர்ச்சிபெற முடிந்தது. இப்போது நான் ஐஐடி ரூர்க்கியில் கெமிக்கல் என்ஜினியரிங் படித்துவருகிறேன். ஐஐடி ரூர்க்கியில் இடம் கிடைத்துவிட்டாலும், அதில் சேரத் தேவையான பணத்தை என்னால் கட்ட முடியவில்லை. சூப்பர் 30தான் எனக்காக உத்தரவாதப் பத்திரத்தில் கையெழுத்திட்டு உதவியது"* – ஷிவாங்கி குப்தா (சூப்பர் 30 குழு 201213ஆம் ஆண்டு), பௌதிகப் பொறியியல் (கெமிக்கல் என்ஜினியரிங்), ரூர்க்கி இந்தியத் தொழில்நுட்ப கல்வி மையம்.

# காலச்சுவடு பதிப்பகம் | பெருமாள்முருகன் நூல்கள்

**நா | வ | ல்**

## பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை




ரூ. 175

புதைந்திருக்கும் கதைகள் எத்தனை காலம்தான் விதையுறக்கத்தில் ஆழ்ந்திருக்கும்? மனிதர்களைப் பற்றி எழுத அச்சம். தெய்வங்களைப் பற்றி எழுதவோ பேரச்சம். அசுரர்களைப் பற்றி எழுதலாம். அசுர வாழ்க்கையும் கொஞ்சம் பழக்கம்தான். இப்போதைக்குத் தொட்டுக்கொள்ளலாம். சரி, விலங்குகளைப் பற்றி எழுதுவோம். ஆழ அறிந்தவை ஐந்தே ஐந்து விலங்குகள்தாம். அவற்றில் நாயும் பூனையும் கவிதைகளுக்கானவை. மாடு, பன்றி ஆகியவற்றைப் பற்றி எழுதவே கூடாது. மிஞ்சியது ஆடு ஒன்றுதான். பிரச்சினை தராத அப்பிராணி ஆடு. ஆட்டில் இரண்டு வகை. வெள்ளாடு, செம்மறி. சுறுசுறுப்பானது வெள்ளாடு. கதையில் ஓட்டம் இருக்க வேண்டும். அதற்கு லாயக்கு வெள்ளாடுதான். இரண்டாண்டுகளுக்குப் பின் இவ்விதமான உருவான எனது பத்தாவது நாவல் 'பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை.'

## ஆலவாயன்
## அர்த்தநாரி
## மாதொருபாகன்




விலையடக்கப் பதிப்பு ரூ. 260

பெருமாள்முருகனின் மாதொருபாகன் நாவலின் தொடர்ச்சியாக அவர் எழுதிய இரண்டு நாவல்கள் ஆலவாயன், அர்த்தநாரி. இந்த மூன்று நாவல்களையும் இணைத்து உருவாக்கிய தொகுப்பு இது.

## மாதொருபாகன்




விலையடக்கப் பதிப்பு ரூ. 125

குழந்தைப்பேறு தொடர்பான சமூகப் பொதுக்கருத்தியல் இதில் விவாதத்திற்கு உள்ளாகிறது. விடுதலைக்கு முந்தைய காலத்து நிகழ்வுகளை மையமிட்டு மண்மணம் ததும்பும் எளிய மொழிநடையில் பாலியல் சார்ந்து மனித மனங்களின் நுட்பங்களை ஊடுருவிச் செல்கிறது நாவல்.

## ஆலவாயன்




விலையடக்கப் பதிப்பு ரூ. 125

'மாதொருபாகன்' நாவல் முடிவு இரு கோணங்களைக் கொண்டது. அதில் ஒன்றைப் பின்பற்றி விரிந்து செல்கிறது 'ஆலவாயன்.' தன்னளவில் முழுமை பெற்றிருப்பதால் இதைத் தனித்தும் வாசிக்கலாம். ஆண்களைச் சார்ந்தும் சாராமலும் உருக்கொள்ளும் பெண் உலகின் விரிவையும் அதற்குள் இயங்கும் மனஉணர்வுகளையும் காணும் நோக்கு இந்நாவல்.

## நிழல்முற்றம்




ரூ. 150

பெருமாள்முருகன் நாவல்களில் அணுக்கமான வாசகர்களைப் பெற்றுத் தந்தது 'நிழல்முற்றம்.' விவரணை குறைந்தும் நுட்பம் மிகுந்தும் இருப்பதுதான் அதற்குக் காரணம்.

## பூக்குழி




ரூ. 175

'பூக்குழி'யின் மூன்றாம் பதிப்பு இது. வாழ்வை ஒருகோணத்தில் அணுகுவதை முதன்மையாக்கிப் பிற கோணங்களையும் கொண்டுவந்து முரண்களைக் கூர்மையாக்கிக் காட்டும் தன்மையில் எழுதப்பட்டது இது.

## அர்த்தநாரி




விலையடக்கப் பதிப்பு ரூ. 125

'மாதொருபாகன்' முடிவின் இரு வெவ்வேறு கோணங்களை விரித்து 'ஆலவாயன்', 'அர்த்தநாரி' ஆகிய நாவல்களாக உருவாக்கியுள்ளார் பெருமாள்முருகன். இவை ஒரு நாவலின் அடுத்தடுத்த பாகங்கள் அல்ல. தம்மளவில் முழுமை பெற்றுத் தனித்தியங்குபவை. பெண்மீது ஆண் கொள்ளும் உடைமை உணர்வின் காரணமாக ஏற்படும் உறவுச் சிக்கல்களைப் பேசுகிறது 'அர்த்தநாரி.'

## ஏறுவெயில்




ரூ. 225

வெயில் உணர்ந்து வெயிலில் திரிந்து வெயிலில் புரண்டு வெயிலோடு உறவாடி வெயில் தாங்கி வளர்ந்த மேனி இது. சிலசமயம் இளவெயில். இளவெயிலில் நீராடிக் களிக்கிறேன். பெரும்பாலும் உச்சிவெயில். உச்சிவெயிலில் பாறையில் வீசப்பட்ட புழுவாய்த் துடிக்கிறேன். வெயில் ஏறிக்கொண்டேதான் இருக்கிறது. மேகம் மறைக்கும் கணம்கூட இல்லை. இறங்குமுகமும் அதற்கில்லை. ஏறுவெயிலை என் வாழ்வின் குறியீடாகக் காண்கிறேன்.

பெருமாள்முருகன்

## கூளமாதாரி

ரூ. 325




என் நாவல்களில் 'கூளமாதாரி'யைப் போல நான் லயித்து எழுதிய நாவல் பிறிதொன்றில்லை. காரணம் அதன் களம். என் பால்யம் இன்றைக்கும் வாழும் களம் அது.

பெருமாள்முருகன்

## கங்கணம்

ரூ. 375




என் வாழ்வில் அறியாமல் நான் நிகழ்த்திய அற்புதம் என ஏதாவது ஒன்று இருக்குமானால் அது 'கங்கணம்'தான். எப்படி இது நிகழ்ந்தது என வியப்படைவதுண்டு. என் அறிதலும் புரிதலும் உணர்தலும் ஒருங்கிணைந்து உருப்பெற்ற நாவல் இது.

பெருமாள்முருகன்

## ஆளண்டாப் பட்சி

ரூ. 250




என் வாழ்வின் பன்னிரண்டாம் வயதில் தொடங்கிய இடப்பெயர்வு இன்னும் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. எத்தனை இடங்கள், எத்தனை நிலங்கள், எத்தனை வீடுகள், எத்தனை அறைகள், எத்தனை மனிதர்கள், எத்தனை சூழல்கள், எத்தனை பின்னணிகள், எத்தனை மனோபாவங்கள்ஞ் எத்தனைஞ் எத்தனைஞ் என நீளும் இவற்றின் ஒரு துளியை எழுத்தில் பிடித்துப் பார்க்கலாம் என்னும் நப்பாசையில் எழுதிய நாவல் 'ஆளண்டாப் பட்சி.'

பெருமாள்முருகன்

**சி | று | க | தை**

## பெருமாள்முருகன் சிறுகதைகள் (1988 – 2015)

ரூ.




நான்கு தொகுப்புகளாக வெளியானவை, நூல்களில் இடம்பெறாதவை அனைத்தும் சேர்ந்த ஒட்டுமொத்தத் தொகுப்பு இது. இவற்றைத் தொகுத்துப் பார்த்தபோது இன்னும் கொஞ்சம் கதைகள் எழுதியிருக்கலாமே என்னும் உணர்வு தோன்றியது. இனிமேல் எழுதப் போகும் கதைகளைப் பற்றிச் சிந்திக்க உத்வேகம் உருவாயிற்று. மேலும் இக்கதைகள் என் இலக்கிய ஆற்றலின் போக்கை உணர்த்தும் பெரும்சான்றாக விளங்கி வாசிப்போரின் அனுபவ வெளியை விரிவாக்கும் எனவும் நம்புகிறேன்.

பெருமாள்முருகன்

**க | வி | தை**

## கோழையின் பாடல்கள்

ரூ. 225




இந்தத் தொகுப்பிலுள்ள பெரும்பான்மையான கவிதைகள் காலமும் சூழலும் பிடரியில் சுமையாக அமர்ந்த வேதனை தாளாமல் கவிமனம் வெளிப்படுத்தியவை. துரத்தலுக்கு இடையில் சற்றே நின்று கொஞ்ச நேரம் மூச்சு வாங்கிக்கொள்ள எழுதப்பட்டவை.

## மயானத்தில் நிற்கும் மரம்

ரூ. 225




'கோழையின் பாடல்கள்' (2016) நூலுக்கு முன் வெளியான 'நிகழ் உறவு' (1992), 'கோமுகி நதிக்கரைக் கூழாங்கல்' (2000), 'நீர் மிதக்கும் கண்கள்' (2005), 'வெள்ளிசனிபுதன் ஞாயிறுவியாழன்செவ்வாய்' (2012) ஆகிய நான்கு நூல்களின் கவிதைகளும் சேர்ந்த ஒட்டுமொத்தத் தொகுப்பு இது.

**க | ட் | டு | ரை**

## பதிப்புகள் மறுபதிப்புகள்

ரூ. 195




என் மொழிநடையும் ஆய்வை விவரிக்கும் விதமும் கல்வித்துறை ஆய்வுகளிலிருந்து வெகுவாக வேறுபட்டவை. பொதுவாசகரின் கவனத்தில் பதிப்புணர்வை இருத்த வேண்டும் என்பதே என் நோக்கம். நூல்களைத் தேடித் தேடி வாங்கி வாசிக்கும் வாசகர் நல்ல பதிப்புகளை நாடிச் சென்றால் அவர்களின் வாசிப்பு எளிமையானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமையும்.

பெருமாள்முருகன்

## துயரமும் துயர நிமித்தமும்

ரூ. 175




தொண்ணூறுகளின் இறுதியிலும் இரண்டாயிரத்தின் தொடக்கத்திலும் மதிப்புரைகள், விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதில் பெரும் ஆர்வத்துடன் இருந்தேன். அதற்காகக் கடுமையாக உழைத்திருக்கிறேன். பொருட்படுத்தத்தக்க விமர்சனக் கட்டுரைகள்தான் இவை என்பதை இப்போது மறுபதிப்புக்காக வாசிக்கும்போதும் உணர்கிறேன்.

பெருமாள்முருகன்

காலச்சுவடு சிறப்புச் சந்தா திட்டம் | சென்னைப் புத்தகக் கண்காட்சியில் மட்டும் இரண்டாண்டுச் சந்தா ரூ. 475 ரூ. 575